# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, விர்ஜின், ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, டோன்போஸ்கோ மேரி- திருச்சி, ஸ்டெல்லா ரோஸ், மிரியம்- திண்டுக்கல், அனன்சியா மேரி, அருள் மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பவுலின், பிலோமினாள் - கும்பகோணம், லூயிஸ் ஜெசிந்தா, ஆக்னஸ் ரோசாள், மார்சலோசா மேரி, லோரா மேரி, லாசரிற்றா மேரி - தூத்துக்குடி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி, ஃபெர்சி மேரி- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி- சிவகங்கை, குழந்தைதெரஸ் - சேலம், ஜெனிபர் - ஹரிஹார், றோஸ்லி - திண்டுக்கல், சலேத்மேரி - திருப்பூர், சகாயம்- கடலூர், அருள்சீலி - முட்டம்.

**அருட்சகோதரர்கள்**

ஜோசப் ஜான்சன், விக்டர் சிங், ஆரோக்கியராஜ் -மஊச

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், பாத்திமா, ஞானசேகரன், நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, மார்கிரேட் பெல்சியா- திண்டுக்கல்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி- கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ், வியாகுல மேரி, ராணி, பிரேமா மோரிஸ் - சென்னை, மரிய பிரகாசம் - தர்மபுரி, மேரி - இளையரசனேந்தல், சிப்ரியன் - தெளி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. குழந்தை தெரஸ் - சேலம்
அருட்சகோதரி. ஜெனிபர்- ஹரிஹார்
அருட்சகோதரி. ஜான்சி மேரி - மதுரை
திருமதி. லீமா தெரஸ் - திருச்சி
திரு. மரிய பிரகாசம் - தர்மபுரி
திரு. அனிருத் ஜோஸ்வா - திருச்சி

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# அழகிய தாய்மையே

## பதிப்பாசிரியர் பக்கம்

ஙு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


டிசம்பர் மாதம் என்றாலே ஒரு மகிழ்ச்சியின் மாதம். காரணம் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா. உலகைப் படைத்த கடவுள் தன்னுடைய கடவுள் தன்மையை விட்டுவிட்டு ஒரு சாதாரண மனிதனாக இந்த உலகில் பிறந்த நிகழ்வுதான் வரலாற்றையே புரட்டிப்போட்ட நிகழ்வு. அந்த நிகழ்வினைத்தான் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 25-ம் தேதி நாம் நினைவு கூர்கின்றோம்.

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா என்பது ஆண்டவர் இயேசுவை மையப்படுத்திய ஒன்று. ஆனால் அங்கு நினைவுகூர வேண்டிய ஒன்று அன்னை மரியாளின் தாய்மை. இந்த தாய்மை மனித குலத்தின் மகிமை, ஒரு பெண்ணின் வாழ்வின் முழுமை. இது மனிதம் போற்ற வேண்டிய ஒன்று. திருமண வாழ்வின் கனியான குழந்தையை பெற்றெடுக்க ஒவ்வொரு பெண்மணியும் ஏங்குவார். தன் வயிற்றில் உருவான குழந்தையைத் தொட்டு, அணைத்து முத்தமிடும்போது அவள் அடையும் ஆனந்தத்திற்கு அளவு என்பதே கிடையாது.

குடும்பத்தில் எவ்வளவுதான் கஷ்டம் இருந்தாலும் குழந்தையை வயிற்றில் சுமக்கும் தாய் பட்டினி கிடப்பதில்லை. அவளுக்காக ஒன்றும் அவள் உண்பது இல்லை, அவள் வயிற்றில் சுமக்கும் குழந்தைக்காக உண்ணுகின்றாள். தூக்கம் வரவில்லையென்று அவள் புரண்டு படுப்பது



## உள்ளே




கதையினில் கலந்த மரியா - 05
துணிகளில் பொதிந்து கிடத்திய மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
அன்னை மரியின் தாலாட்டு - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
வாருங்கள் தாலாட்டுவோம் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

கிடையாது, தன் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயம்தான். பேறுகால வலி என்பது உயிர்போகின்ற வலி. இது அத்தனை பெண்களுக்கும் தெரியும், இருந்தும் குழந்தையை வயிற்றில் சுமக்கின்றனர். குழந்தையைப் பெற்றெடுக்கும்போது எத்தனையோ பெண்கள் இறந்திருக்கின்றார்கள், இருந்தும் தைரியமாக குழந்தையை வயிற்றில் சுமக்கின்றார்கள். குழந்தை பெற்றெடுத்தால் புற அழகு போய்விட வாய்ப்பு இருக்கிறதென்று தெரிந்தும் பெண்கள் வயிற்றில் குழந்தையை சுமக்கின்றார்கள். வலியானது மகிழ்ச்சியைக் கொடுக்க முடியுமா என்றால் முடியும். தன் வயிற்றில் இருக்கும் குழந்தை மிதிக்கும்போது பெண்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். பெற்றெடுத்த குழந்தையின் முகம் பார்க்கும்போது தாய் தான் 10 மாதம் குழந்தையை வயிற்றில் சுமக்கும்போது பட்ட அத்தனை கஷ்டங்களையும் மறக்கின்றாா்.

ஒரு சாதாரணப் பெண்ணின் தாய்மையே இவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்றால் அசாதாரணப் பெண்மணியான மரியாளின் தாய்மை எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்க முடியும். ஆண்டவர் இயேசுவை தன்னுடைய வயிற்றில் சுமந்து கொண்டிருந்த 10 மாதங்கள் அன்னை மரியாவுக்கு மகிழ்ச்சியான நாட்களா என்றால் நிச்சயமாக இருந்திருக்க வாய்ப்பில்லை. இயேசுவைத் தன்னுடைய வயிற்றில் கருத்தாங்கிய நொடியில் இருந்து அன்னை மரியாளின் வாழ்க்கையில் வியாகுலப் புயல் வீசத் தொடங்கிவிட்டது.

உயிருக்கே உத்திரவாதம் இல்லா அளவிற்கு அந்த வியாகுலப் புயலின் வேகம் இருந்தது. எந்த அளவுக்கு என்றால் யூத மரபில் ஒரு பெண் திருமணத்திற்கு முன்பே கருத்தரித்து இருக்கின்றாா் என்றால் அவளை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. இது அன்னை மரியாளுக்கு தெரியுமா என்றால் தெரியும். இருந்தும் ஆண்டவர் இயேசுவை தன் வயிற்றில் சுமக்கின்றாா். மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக பெத்லகேம் சென்ற இடத்தில் பேறுகால வேதனையில் துடித்தபோதும், ஒவ்வொரு சத்திரமாக ஏறி இறங்கி தங்குவதற்கு இடம் கேட்டு கிடைக்காத போதும் பட்ட துன்பத்திற்கு அளவு கிடையாது.

ஒரு சாதாரண பெண்மணிக்கு எளிதாக கிடைக்கும் வசதிகள் அன்னை மரியாளுக்கு கிடைக்கவில்லை. மாட்டுத் தொழுவத்தில்தான் அன்னை மரியாளுக்கு இடம் கிடைக்கின்றது. ஆண்டவர் இயேசு ஒரு மனிதனாக இந்த மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றாா். வரலாற்றில் எத்தனையோ அரசர்கள் பிறந்து இருக்கின்றாா்கள், அவர்கள் அனைவரும் மாட மாளிகையில் பிறந்திருந்தார்கள். ஆனால் உலகின் அரசர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருக்கின்றாா். தன் மகனை ஒரு அழகான இடத்தில் பெற்றெடுக்க முடியவில்லையே என்று நிச்சயமாக அன்னை வருந்தியிருப்பார். அத்தனை கஷ்டங்களையும் அன்னை தாங்கியது தாய்மை என்ற பேற்றினை அடையத்தான். மரியாளின் தாய்மை இயேசுவுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. நம் அனைவருக்கும் சொந்தமானது.

**தாய்மை என்பது சுமை தாங்கும் வலி அல்ல**

**தாய்மை என்பது சுகம் அளிக்கும் வாழ்க்கை**





# நாஞ்சிக்கோட்டை ஜீவமாதா இல்லத்தின் சாட்சிகள்

**ஹெலன்**

நான் தேவநகர் மெடிக்கல் காலேஜ் ரோடு பகுதியில் இருந்து வருகிறேன் என்னுடைய மகள் அஸ்மிதா அவள் சாஸ்திரா கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பொறியியல் படித்து வருகிறார் அவருக்கு உடல்நிலை சரி இல்லாமல் இருந்தது. மருத்துவரிடம் சென்று காட்டினோம் அப்பொழுது மருத்துவர் ஸ்கேன் ரிப்போர்ட் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் நாங்கள் சற்று பயந்தோம் முதல் சனிக்கிழமை ஜீவமாதா கோயிலுக்கு சென்று வேண்டுதல் வைத்து என் மகளுக்கு எதுவும் இருக்கக் கூடாது ஸ்கேன் நார்மலாக வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டேன் அதன்படி ஸ்கேன் ரிப்போர்ட் நார்மலாக இருந்தது உடல்நிலையும் சரியாகி விட்டது ஜீவ மாதா வழியாக ஆண்டவருக்கு நன்றி செலுத்தி நான் வேண்டிக் கொண்டதன்படி பொருத்தினை செய்து மாதாவுக்கு நன்றி செலுத்துகிறேன். ஜீவ மாதா வாழ்க. மரியே வாழ்க.

8-ம் பக்க தொடர்ச்சி............

மிக்கதாக இருக்க வேண்டும். இவர்கள் சமுதாயத்தில் உள்ள மற்ற குழந்தைகளோடு ஒட்டி, உறவாடி மகிழ வேண்டும். குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்க வேண்டாம் என்று இயேசு கூறினாரே. அவர்களை அரவணைத்து ஆசீர்வதித்தாரே. நாமும் இயேசுவைப் போன்று அவர்களை அரவணைப்போம். ஆசீர்வதிப்போம்.

**நிறைவுரை**

கோவிட் 19 உலகை ஆட்டிப் படைத்தபோது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், பெண்கள், குழந்தைகள் தம் சொந்த ஊர்களைத் தேடி நெடும் பயணம் மேற்கொண்டனர். அப்போது வழியில் எத்தனை பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். நமது அன்னை மரியா இத்தகைய பெண்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கின்றாா். அருகில் மருத்துவமனைகள் இல்லாத இடங்களில் அன்னையர்படும் வேதனையை விவரிக்க முடியாது. நமது அன்னை மரியா இத்தகைய பெண்களின் அருகில் இருக்கின்றாா். அவர் தனது மகனைத் தீவனத் தொட்டியில் மட்டும் பொதிந்து வைக்கவில்லை. தனது குழந்தையை எதிரிகளின் கையினின்று காப்பாற்ற எகிப்துக்கு நெடும் பயணம் மேற்கொண்டார். அகதியாக எகிப்து நாட்டில் வாழ்ந்தார். இயேசு மூன்று நாள் காணாமற் போனபோது எருசலேம் நோக்கிப் பயணித்தார். இந்த உலகம் என்ற தீவனத் தொட்டியில் நமக்காக தன் மகனைக் கையளித்தார் என்று கூட சொல்லலாம். கிறிஸ்தவர்களாகிய நாம் எந்த சூழல், சவால்களை சந்தித்தாலும், இறைபராமரிப்பு என்ற துணியில் போர்த்தப்பட்டிருக்கிறோம். அன்னை மரியா நமது அருகில் இருக்கின்றாா். நம்மோடு பயணிக்கின்றாா் என்ற நம்பிக்கை நம்மில் தொடர்ந்து வளர வேண்டும். அனைவரையும் குறிப்பாக எளியோர் சமுதாயத்தின் விளிம்பு நிலையில் இருப்போரை, துணிகளில் பொதியப்பட்ட குழந்தை இயேசுவைப் போல நாமும் நமது அன்பால் கருணைநிறை உள்ளத்தால் அரவணைத்துக் கொள்வோம்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

நவம்பர் மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**ஜெயஷீலா – சோழிங்கநல்லூர்**

நான் ஜீவமாதாவிடம் 15 வருடமாக வருகிறேன். எனக்கு குழந்தை இல்லாமல் இருந்தது. 8 வருடங்களுக்கு முன் அன்னை எனக்கு குழந்தை வரம் தந்தார்கள். என் கணவருக்கு ஜனவரி 14-ம் தேதி Brain burst ஆகிவிட்டது. ஆகவே அவரைக் காப்பாற்ற முடியாது என்று செட்டிநாடு மருத்துவமனையில் கூறினார்கள். மேலும் கபாலம் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள். மேலும் சிகிச்சை செய்தாலும் செய்யாவிட்டாலும் காப்பாற்ற முடியாது என்றார்கள். அரசு மருத்துவமனை மருத்துவர் ஒருவரால் அறுவை சிகிச்சை இல்லாமல் காப்பாற்ற முடியும் என்றார்கள். அதேபோல் அறுவை சிகிச்சை இல்லாமல் ஜீவமாதா என் கணவரை காப்பாற்றினார்கள். என் கணவரும் ஆலயத்திற்கு வந்தார். ஜீவமாதா வழியாக இறைவனுக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகாய ராஜ், இந்து பிரியா**

எனக்கு திருமணாகி 5 வருடங்கள் கடந்தும் குழந்தை இல்லை. என் மாமனார் ஜீவமாதாவைப் பற்றிக் கூறினார்கள். நானும் மாதாவிடம் வந்து ஜெபம் செய்தேன். மேலும் இரண்டு தடவை கருக்கலைப்பு ஆனது. நான் மாதாவிடம் அழுது மன்றாடினேன். எனக்கு ஒரு குழந்தை தானமாக கொடுங்கள் அம்மா என்றேன். அதேபோல் மாதாவின் அருளால் மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

15 நாட்களுக்கு முன் நான் பஸ்ஸில் வரும்போது தவறி விழ இருந்த நேரத்தில் மாதாவிடம் மன்றாடினேன். என்னை அற்புதமாக காப்பாற்றினார்கள். மேலும் எனக்கு நிறைய கஷ்டங்கள் இருந்தது. எல்லாவற்றிலிருந்தும் என்னைப் பாதுகாத்த அன்னைக்கு நன்றிகள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**இரக்கத்தின் அரசி அன்னை மரியாள்**

ஓர் நாட்டின் அரசனுக்கு வயதானது. தனக்குப்பின் தன் நாட்டை ஆள ஒருவரை தேர்ந்தெடுக்க முடிவு செய்கிறான். தன்னுடைய மூன்று மகன்களையும் அழைத்து உங்களில் ஒரு மாதத்தில் போற்றுதற்குரிய ஒரு செயலை செய்து முடிக்கிறவனுக்கு எனது அரியணை பரிசாகக் கொடுக்கப்படும் என்று கூறினார். மூன்று பேரும் வெவ்வேறு இடங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார்கள். ஒரு மாதம் கழிந்து மூத்த மகன் வந்து "என் சொத்துக்களில் பாதியை விற்று ஏழைகளுக்கு எல்லாம் உதவி செய்தேன்" என்று கூறினான். அரசன் அவனைப் பாராட்டி அரசனுக்கு தேவையான பண்புகள் இவை, ஆனால் அரசனாவதற்கு இவை போதாது என்றார். இரண்டாவது மகன் வந்து "இரு குழந்தைகளை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றது, பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர், நான் என் உயிரைப் பணயம் வைத்து அவர்களைக் காப்பாற்றினேன்" என்றான். அரசன் அவனை வெகுவாகப் பாராட்டி இதுவும் அரசப் பண்புதான் ஆனால் அரியணை ஏறுவதற்கு இது போதாது என்றார். மூன்றாவது மகன் வந்து "நான் நேற்று மலைப் பாதையில் வந்து கொண்டிருந்த போது பாறை விளிம்பிலே என்னுடைய பரம எதிரி தூங்கிக் கொண்டிருந்தான். அவன் அருகிலே சென்றேன். அவனை அப்படியே விட்டுவிட்டால், ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்து இறந்திருப்பான், அவனை எழுப்பி காப்பாற்றி விட்டு வந்தேன்" என்றான். அரசன் அவனைப் பாராட்டி இது அசாதரணமான செயல், இது உன்னுடைய மனமுதிர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது என்று கூறி நீதான் இந்த நாட்டை ஆள்வதற்கு சரியான நபர் என்று சொல்லி அவனை அரசனாக நியமித்தார்.

இரக்கமுள்ள மனிதன் ஒரு அசாதாரணமான மனிதன். மரியாள் இரக்கத்தின் அரசியாகப் போற்றப்படுகிறாள். புனித அத்தனாசியஸ் "மகன் அரசன் என்றால் அவனை பெற்றெடுத்த தாய் அரசியாகத்தான் இருக்க வேண்டும்" என்று எழுதுகிறார். புனித தாமஸ் அக்யுனாஸ் "கன்னிமரியாள் இறைவார்த்தையை கேட்டு கருத்தாங்கி குழந்தை இயேசுவை பெற்றெடுத்த நொடிப்பொழுதே இரக்கத்தின் அரசியாக உயர்த்தப்பட்டார், இயேசு நீதியின் அரசராக திகழ்கிறார்" என்கிறார். லூக்கா 1:54-55 "மூதாதையருக்கு உரைத்தப்படியே இவர் ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்" என்று மரியா பாடுகின்றார். இறைவனின் அளப்பரிய இரக்கத்தை "ஆகட்டும்" என்ற ஒற்றை சொல்லின் வாயிலாக மண்ணுலகிற்கு பெற்றுக் கொடுத்தவர் அன்னை மரியா. இரக்கத்தின் அரசியை உற்று நோக்கும் அனைவரின் வாழ்வும் மாற்றம் பெறும். ஆகவே, அன்னையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நீதியின் அரசரை நம்முடைய குடும்பங்களில் பெற்றெடுக்க முயலுவோம். இந்த கிறிஸ்துமஸ் பெருவிழா இறையிரக்கத்தின் பெருவிழாவாக ஜொலிக்கட்டும்.

**இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

# துணிகளில் பொதிந்து கிடத்திய மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பு விழா. விண்ணுலகில் மகிமை. மண்ணுலகில் நன்மனத்தோருக்கு அமைதி என்பதே இவ்விழா நமக்குத் தரும் செய்தி. மூன்றாம் உலகப்போருக்கு முன் தயாரிப்பாக ஆங்காங்கே வன்முறைக் கிளர்ச்சியினால் மனித உயிர்கள் கொத்துக் கொத்தாக மடிந்து வரும் நிலையில் என்ன மகிமை, மகிழ்ச்சி, அமைதி என்ற சோகம் நம்மைக் கவ்வுகிறது. ஆயினும் ஒவ்வொரு ஆண்டும் இவ்விழா நமக்கு ஒரு புதிய செய்தியைத் தருகிறது. இயேசுவின் பிறப்பு நிகழ்வு பற்றிய பகுதியினை வாசிக்கும் போது நற்செய்தியாளர் லூக்கா நம்மை சற்று ஆழத்திற்கு அழைத்துச் செல்வதை உணர முடிகிறது. மரியா குழந்தையை துணிகளில் பொதிந்து கிடத்தினார் என்று அழுத்தம் தருவது நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது. இச்செயல் வழியாக மரியா நமக்கும், இந்த சமுதாயத்திற்கும் கூறும் செய்தியைக் கேட்போம். தனது தாய்மைப் பண்பினால் இந்த உலகத்தையே தனது மகனை சுமந்த மடியில் பொதிந்து பொக்கிஷமாய் வைத்துள்ளார். இயேசுவைப் போன்றே நம் அனைவரையும் அவரது அன்பு மக்களாக கருனையுடன் கண்ணோக்குகின்றார். இக்கட்டுரையில், துணிகளில் பொதிந்து கிடத்திய மரியா நமக்குக் கூறும் செய்தியினைக் கேட்போம். சிந்திப்போம். வாழ்வாக்குவோம்.

## இறைவார்த்தையை இதயத்தில் பொதிந்தவர்

மரியா இறைவனைத் தனது உதரத்தில் கருத்தாங்குமுன்பே, இறைவார்த்தையை இதயத்தில் கருத்தரித்திருந்தார். இறைவார்த்தையை இதயத்தில் பதித்து வைத்திருந்தார். 'நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று பணிந்த மரியா வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்வையும் தனது உள்ளத்தில் வைத்து தியானித்து வந்தார். இறைவார்த்தை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர் என்று எலிசபெத்து அவரைப் போற்றினார். இறைவார்த்தையின்படி நடப்பவர்கள் தன் தாயும் சகோதரர்களும் என்று இயேசு கூறிய போது, தனது தாயை பிறருக்கு முன் மாதிரியாகக் காட்டினார். அந்த வார்த்தை மனுவுரு எடுத்த போது அவரை தனது உதரத்தில் கருத்தாங்கினார். இறைப்பிரசன்னத்தால் நிரப்பப்பட்டார். இறை ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டார். இவ்வுலகின் முதல் நற்கருணைப் பேழையாக இயேசுவையும் அவர்தம் வார்த்தையையும் சுமந்தவராய் அன்றைய யூத சமுதாயத்தில் வலம் வந்தார். இறைவார்த்தையை தனது இதயத்திலும் இறைமகனை தனது உதரத்திலும் தாங்கியதால் அவர் அருளுக்கு மேல் அருளைப் பெறும் ஒரு பாத்திரமாக விளங்கினார். அவரது இதயமும் உதரமும் திருக்கோவிலாகத் திகழ்ந்தன. காலம் நிறைவுற்ற போது இந்த மரியா கடவுளின் மகனைப் பெற்றெடுத்தார். உலகைப் படைத்த அரசர் பிறப்பதற்கு மாட்டுத் தொழுவமே கிடைத்தது. மரியா தனது மகனைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்.

## துணிகளில் பொதிந்து கிடத்தினார்

நிறை கர்ப்பிணியாக நீண்ட தூரம் பயணித்து பெத்லகேமை அடைந்தனர் யோசேப்பும் மரியாவும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக





மலையேறி மாடுமேய
மடுவிறங்கிப் பால்சுரக்க
பொழுதிறங்கி வா பசுவே - இந்த
பொன்னு மகன் பால் குடிக்க
பாவக் குளிர் வாட்டயிலே
பஞ்சணைக்கு எங்கே போவோம்?
அம்மா அன்பின் அரவணைப்பில்
அயர்ந்து நீயும் தூங்கிடையா
ஆரிராரி ராராரோ - ஆரிராரி ராராரோ
கண்ணான கண்மணியே
கற்கண்டே சர்க்கரையே
குளிராலே வாடுகின்ற
எளியோரைப் பாருமையா
ஆரிராரி ராராரோ - ஆரிராரி ராராரோ
குழந்தையாக மரி வயிற்றில்
குவலயத்தில் வந்த கண்ணே
அருளான போர்வையாலே
அகிலத்தையே காத்திடையா
கண்ணான கண்ணுறங்கு
கானகத்து வண்டுறங்க
பொன்னான பொன்னுறங்கு – அன்பே நீ
பூமரத்து வண்டுறங்கு
ஆரிராரி ராராரோ – கண்ணே நீ - ஆரிராரி ராராரோ
அன்மை மரி பாலகனே!
அன்புநிறை உள்ளத்திலே
ஆணவம் இல்லா எண்ணத்திலே
தன்னலம் இல்லா மனத்தினிலே
பகிரும் மனித நேயத்திலே
வஞ்சம் இல்லா நெஞ்சத்திலே
பஞ்சம் இல்லாப் பாசத்திலே
கள்ளம் இல்லா இதயத்திலே
வன்முறை இல்லாச் சூழலிலே
பொறாமை இல்லா உறவினிலே
ஊழல் இல்லா அரசியலிலே
மகிழ்ந்தே பிறப்பாய் மன்னவனே!

# வாருங்கள் தாலாட்டுவோம்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

ஆரிராரி ராராரோ - இயேசு பாலா
ஆரிராரி ராராரோ
கண்ணே உறங்கு – அன்பே நீ
கானகத்து வண்டுறங்கு
பொன்னே உறங்கு – ஐயா நீ
பூமரத்து வண்டுறங்கு
வண்டாடப் பூமலர – கண்ணே உந்தன்
ரெண்டு கையும் செண்டாட
செண்டாடப் பூமலர – ஐயா உன்னை
தேசத்தார் கொண்டாட
ஆரடிச்சா நீ அழுக – அன்பே உன்னை
அடிச்சாரெச் சொல்லி அழு
உன்னதர் அடிச்சாரோ
ஊசி மல்லிச் செண்டாலே
வானவர் அடிச்சாரோ
வாசமல்லிச் செண்டாலே
நேசமாய் அடிச்சாரோ
நெய் வார்க்கும் சங்காலே
ஆரடிச்சா நீ அழுக – கண்ணே உன்னை
அடிச்சாரெச் சொல்லி அழு
வானகத்துத் தூதரெல்லாம்
வாழத்திசைத்துப் பாடயிலே
வாடைக் குளிர் வாட்டயிலே
மாடடை மண் குடிசையிலே
மாமரி மென்மடியினிலே – பிறந்த மன்னா
ஆராரோ ஆராரோ - ஆரிராரி ராராரோ
கோயில் மணியடிக்க
குருக்கள்மார் பூசை செய்ய
குருக்கள்மார் பூசையிலே – அன்பே நீ
குடிலினுள்ளே பிறந்தாயோ!





எதிர்பார்த்திருந்த மெசியா விரைவில் பிறக்கப் போகின்றார் என்ற மகிழ்ச்சி இருவரையும் சொல்லொண்ணா ஆனந்தத்தில் நிரப்புகிறது. தங்கள் பெயரைப் பதிவு செய்தபின், உடனடியாக, பிறக்கவிருக்கும் குழந்தைக்கு ஒரு இல்லத்தைத் தேடினர். இறைமகனுக்காக இடம் கேட்கப்படுகிறது என்ற நினைவு இல்லாவிட்டாலும், ஒரு நிறை கர்ப்பிணியின் தேவையை, ஆதங்கத்தை, தவிப்பை உணராத சமுதாயத்தைக் கண்டு வருந்தினர். இறுதியாக மாட்டுத் தொழுவமே கிடைத்தது. இடையர்கள் அங்கு இருந்தார்களா என்பது நமக்குத் தெரியவில்லை. "அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்" (லூக் 2: 6-7).பிறந்த குழந்தையை அனைவரும் மிகக் கவனமாக வெயில், குளிர் பாதிக்காதபடி காப்பாற்றுகின்றனர். ஆனால், யூத மரபிலே பச்சிளம் குழந்தையை தலை முதல் பாதம் வரை துணிகளாலும், வளையங்களாலும் மம்மி போன்று முழுவதுமாக சுற்றிக் கட்டி வைக்கும் வழக்கம் இருந்திருக்கின்றது. நான்கு அல்லது ஐந்து அங்குலம் அகலமும் ஐந்து அல்லது ஆறு அடி நீளமும் கொண்ட துணிகளை பயன்படுத்தினர். மிகவும் பாதுகாப்பான ஒரு தாயின் கருவறையிலிருந்து, மற்றொரு சூழலுக்குள் நுழையும் குழந்தைக்கு இத்தகைய ஒரு சூழலை உருவாக்கித் தந்தனர் யூத மக்கள். இயேசுவும் இவ்வாறு துணிகளால் சுற்றப்பட்டார். மரியா இந்தத் துணியைத் தன்னோடு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஏனெனில் மாட்டுத் தொழுவத்தில் இது கிடைக்க வாய்ப்பில்லை. துணிகளால் பொதியப்பட்டு கிடத்தப்பட்ட இயேசு பல சிந்தனைகளை இறைச்சிந்தனையாளர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றார்.

யூத சமுதாயத்தில் கடவுளுக்கு பலி செலுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட செம்மறி ஆட்டுக்குட்டிகளும் இவ்விதமே துணிகளாலும் வளையங்களாலும் பொதியப்படுவதுண்டு. எனவே, கடவுளின் ஆட்டுக்குட்டியான இயேசுவும் பலியிடப்படுவார் என்பதை உணர்த்தும் விதமாகவும் அவர் துணிகளில் பொதியப்பட்டார் என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. பாலன் இயேசுவை தரிசித்த இடையர்கள் பாக்கியம் பெற்றவர்கள். மெசியாவை முதலில் காணும் அனுபவம் ஆண்டவருடைய தூதரால் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. 'இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம் (லூக் 2:11-12) என்ற செய்தி இடையர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. உண்மையான, ஆயர்களுக்கெல்லாம் மேலான ஆயனும், பலியிடப்படும் ஆடுகளில் எல்லாம் ஒப்பற்ற செம்மறி ஆடான உலகின் பாவங்களைப் போக்கும் மீட்பராம் இயேசுவைக் கண்டு மகிழ கொடுக்கப்படும் அடையாளம் 'துணிகளால் சுற்றப்பட்ட குழந்தை'. இந்தக் குழந்தை எதிர்க்கப்படும் அறிகுறியாகக் கருதப்பட்டார். சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டபோது, மறுபடியும் துணிகளால் பொதியப்பட்டார். ஆனால், எந்தத் துணியும் அவரைக் கட்டுப்படுத்தவில்லை. அனைத்துக் கட்டுகளையும் உடைத்து விட்டு வெற்றி வீரராய் உயிர் பெற்றார். கிழக்கிலிருந்து ஞானிகள் புறப்பட்டு யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவரை ஆராதிக்க வருகை புரிந்த போது தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும், சாம்பிராணியும், வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். வெள்ளைப்போளம் இயேசுவின் இறப்பைக் குறித்துக் காட்டும் அடையாளமாக அமைந்திருந்தது.

'துணிகளில் பொதியப்பட்டேன் பேணி வளர்க்கப்பட்டேன்" என்ற சாலமோன் மன்னனின் பிறப்பு பற்றிய செய்தி இங்கு தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்த இயேசுவில் நிறைவேறுகிறது (சால. ஞா 7:4). துணிகளால்

பொதிந்து குழந்தைகளைப் பாதுகாப்பது இறை பராமரிப்பை உணர்த்துவதை விவிலியத்தின் மற்றொரு பகுதி எடுத்தியம்புகிறது. உப்பு நீரால் கழுவப்படாமலும், துணிகளால் சுற்றப்படாமலும் இருந்த எருசலேமை நீராட்டி, நார்ப்பட்டால் போர்த்துவதை இறைவாக்கினர் எசேக்கியேல் உணர்த்துகின்றார் (எசே 16).

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நசியானைச் சேர்ந்த புனித கிரகோரி கூறுவார்: துணிகளில் பொதியப்பட்ட இயேசு உயிர்த்தெழுந்து அத்துணிகளை அகற்றினார். அதே நூற்றாண்டைச் சார்ந்த எருசலேமின் சிரில் என்று அழைக்கப்பட்ட புனிதர் பின்வருமாறு கூறுகிறார்: இயேசுவின் முதல் வருகையின் போது அவர் தீவனத் தொட்டியில் துணிகளால் சுற்றப்பட்டு இருந்தார். அவரது இரண்டாவது வருகையின் போது ஒளியையும் மாட்சியையும் அணிந்தவராய் காணப்படுவார். இவ்விதமாக துணிகளால் பொதியப்பட்ட பாலன் இயேசுவைச் சுற்றி பல சிந்தனைகள் எழுகின்றன.

விண்ணையும் மண்ணையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த ஆண்டவர் முழுவதுமாக மனிதனோடு கொண்டுள்ள தோழமை உறவை எண்பிக்கும் விதமாக இங்கு மாட்டுத் தொழுவத்தில் காட்சியளிக்கின்றார். நம்மில் ஒருவராக, நம் மத்தியில் வாசம் செய்ய, மகிழ்ந்திருக்க, மனிதத் தன்மையோடு வாழ நமக்குக் கற்றுக் கொடுக்க வறுமை, ஏழ்மையின் உச்சகட்டத்தில் விண்ணாளும் வேந்தன் மனுவாகி இருக்கின்றார். மனிதமும் தாழ்ச்சியும் ஒன்றோடு ஒன்று இதமாகத் தழுவி நிற்பதைத் தீவனத் தொட்டியில் காண்கிறோம். புதிய இஸ்ரயேல் பிறந்துள்ளது. சுற்றப்பட்ட இந்த குழந்தையில் உடன்படிக்கை அனைத்தும் நிறைவேற்றப்படுகிறது. வியர்வையும், அழுக்கும், சாதாரண உடையையும் உடமையாகக் கொண்டிருந்த இடையர்கள் தன்னை முதலில் சந்திக்க அழைப்பு விடுக்கின்றார். ஏழைகளுக்காக நான் பிறந்துள்ளேன் என்ற செய்தியை முழங்குகின்றார். நாமும் ஏழைகளை அன்பு செய்வோம். அவர்களோடு நமது தோழமை உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வோம். எளிய மனநிலையில் வளரக் கற்றுக் கொள்வோம்.

**பொதியப்பட வேண்டிய குழந்தைகள்**

இன்று உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் முழு மனதுடன், விருப்பமுடன் வரவேற்க நாம் தயாராக இருக்க வேண்டும். பெண் குழந்தை என்றால் இன்னும் அதிகமாகவே அவர்களைக் காப்பாற்றி வளர்த்து விட நாம் கடமைப்பட்டுள்ளோம். குழந்தைப் பருவம் பாதுகாப்பானதாக, அன்பும் அரவணைப்பும் நிறைந்ததாக, சத்தான உணவு அளித்து பேணிக் காக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் இறைவனின் கொடை. அதை மாண்புடன் வளர்த்து எடுத்து, அக்குழந்தை எதற்காக இவ்வுலகில் பிறக்கிறதோ அதன் நோக்கம் நிறைவேற்றப்பட பெற்றோர், உற்றார் ஆகியோர் உதவ வேண்டும்.புனித பேதுரு கூறுவது போல பல வகையான அலகைகள் இவர்களுள் யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போல தேடித் திரிகின்றன. இன்றும் இதே மனநிலையில் இதயமற்ற ஒரு சிலர், சிறு குழந்தை முதல் இளம் பெண்கள் வரை பல வகைகளில் இவர்களுக்கு தொந்தரவு கொடுத்து வருகின்றனர். பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகி எத்தனையோ சிறுமியர் உடலிலும் உள்ளத்திலும் காயமுற்றவர்களாக இருக்கின்றனர். பெற்றோரின் அரவணைப்பின்றி தெருவோரங்களில் அனாதைகளாக அவதியுறும் குழந்தைகள், கல்விக் கூடங்களை எட்டிப் பார்க்க வழியில்லாமல் வறுமையில் உழலும் குழந்தைகள், பல வகையான உடல் உழைப்பில் ஈடுபடும் குழந்தைகள், போதிய உணவின்றி பசியால் வாடும் குழந்தைகள் இவர்கள் அனைவரும் கவனமாக, அன்பாக, அக்கறையுடன், கருணையுடன் பொதிந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களின் குழந்தைப் பருவம் மகிழ்ச்சி

தொடர்ச்சி 33-ம் பக்கம்.........





செய்தார் . அதேபோன்று என்னை விளக்கு எரிய வைத்தல், நிலங்களில் விளைந்த விவசாய பொருட்களை பலி பொருளாக காணிக்கை அளித்தல், மொட்டை அடித்து நேர்த்திக் கடன் செலுத்துதல், கிடா வெட்டுதல் போன்ற கிறிஸ்தவ மதத்திற்கு சம்பந்தமில்லாத பழக்க வழக்கங்களை தமிழ் கலாச்சாரத்தோடு ஒன்றி போக வேண்டும் என்றும் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கிறிஸ்துவத்தை இங்கு பரப்ப வேண்டும் என்றும் மேற்சொன்ன எல்லா பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தினார். மேலும், கும்பிடு சேவை அதாவது தலைக்கு மேல் கரங்களை குவித்து இறைவனை வணங்கும் முறை, நெற்றி பொட்டு நிலத்தில் படும்படியாக நெடுஞ்சான் கிடையாக விழுந்து வணங்கும் முறையும் தமிழக கலாச்சாரப்படி இவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அது மட்டுமல்லாமல் இன்றளவும் தமிழக ஆலயங்களிலே ஆரத்தி எடுப்பது பூரண கும்ப மரியாதை செய்வது போன்ற தமிழ் மரபுப்படி வணங்கும் முறையை நாம் பழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

அவரது முனைப்பான முயற்சிகளின் ஒரு பகுதியாக மரியன்னையின் வணக்கத்தை அறிமுகம் செய்ததுடன் அதனை பண்பாட்டு மயமாக்கினார் இவர் காமநாயக்கன்பட்டியில் 1711 - 1715 - ல் பரலோக மாதா ஆலயத்தை , நிறுவினார் அவ்வாலயத்தில் மரியன்னையின் திருஉருவ சிலையை வழிபாட்டிற்கென தமிழ் மக்களின் கலாச்சாரப்படி ஆடைகள் அணிவித்து தான் கட்டிய ஆலயத்தில் அச்சிலையை நிறுவினார். இன்றளவும் அந்த மரச்சிலையானது பொதுமக்களின் வழிபாட்டிற்காக காணப்படுகிறது.

குருக்கள் பட்டியில் 1713 - 1715 - ல் ஒரு மரியன்னையின் ஆலயத்தையும், வடுகர் பட்டியிலும் ஆரோக்கிய அன்னை ஆலயத்தையும், ஏலாக்குறிச்சியில் ஒரு ஆலயத்தையும், தான் களப்பணி ஆற்றிய போது கட்டியவற்றின் வாயிலாக மரியாவின் சிறப்புக்களை விரிவாக வெளிப்படுத்தினார். தமிழக முறையில் மரியா வணக்க செயல்பாட்டையும் அவற்றின் நடைமுறையாக்கங்களையும் செயல்படுத்திக் காட்டினார். அவர் நிறுவிய அடைக்கல அன்னை ஆலயமும் கோனாங்குப்பத்தில் பெரியநாயகி ஆலயமும் பண்பாட்டின்படி மரியாளின் வணக்கத்தை இன்றளவும் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது

அன்னை மரியாள் மீது அருட்பணி பெஸ்கி நான்கு சிற்றிலக்கியங்களை படைத்துள்ளார் அவை திருக்காவலூர் கலம்பகம், அடைக்கல மாலை, அடைக்கல அன்னை மேல் வெண்கலிப்பா, அன்னை அழுகல் அந்தாதி போன்ற நூல்களைப் படைத்துள்ளார் இதன் மூலம் தமிழக மக்கள் தங்கள் மொழியிலேயே அன்னை மரியாள் குறித்து அறிவதற்கு வழிவகை செய்துள்ளார். பெஸ்கி அடிகளார் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் பங்குதல அருட்ப பணியாளராக சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். அவர் இருந்த இடங்கள் அனைத்திலும் திருக்கோயில்கள் கட்டினார் அவற்றை அன்னை மரியாளுக்கு அர்ப்பணம் செய்தார். தமிழக கலாச்சாரப்படி தமிழக மக்களை ஆலயங்களுக்கு திருயாத்திரை செல்லுமாறு ஊக்குவித்தார் இவ்வாறான ஆலயங்களில் பழக்க முறையையும் அன்னை மரியா மீது பக்தியையும் அறிமுகம் செய்து வைத்தார்.

கத்தோலிக்க மரபு மற்றும் திரு அவை வரலாற்றில் புனித கன்னி மரியா முக்கிய பங்கேற்று செயல்படுகிறார் புனித கன்னி மரியா மனித மீட்புக்காக கடவுளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறார் கடவுளின் அன்புக்கு பாத்திரமான மகள். அவள். இயேசுவின் முதல் பெண் சீடர் பின்பற்ற தகுந்த முன்மாதிரியாக அவள் திகழ்கிறார் அவள் வணக்கத்திற்குரியவள் மட்டுமல்ல தந்தையின் விருப்பத்தை பின்பற்றி நடப்பவளும் ஆகிறாள். ஆகவே நாம் மொழி இனம் கலாச்சாரம் ஆகியவற்றை கடந்து அவளை ஏற்றுக்கொண்டு உள்ளன்போடு அவளை வணங்குதலே நம் வாழ்வில் முக்கிய கடமையாகும்



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா (10)

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### தமிழக கலாச்சாரத்தில் அன்னை மரியின் வழிபாடு

தமிழ் மக்களிடையே பெரும்பாலும் பெண் தெய்வ வழிபாடுகளே அதிகம் காணப்படுகிறது. மேலும் பெண் தெய்வங்களுக்கு தமிழக மக்கள் அதிக மதிப்பளித்துள்ளார்கள். வரலாற்றை சற்று பின்னோக்கி திரும்பி பார்க்கும் பொழுது பண்டைய காலத்திலேயே மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த போது அந்த கூட்டத்திற்கு பெண்களை தலைமை தாங்கி இருந்தார்கள் அப்படி இருக்கையிலே ஒரு கூட்டத்திற்கும் மற்றொரு கூட்டத்திற்கும் போர் நடக்கும் பொழுது பெண்களே முன் நின்று அப்போரை வழிநடத்தி இருக்கிறார்கள் அப்போது அந்தப் போரில் வீர மரணம் அடைந்த பெண்களை அக்கூட்டத்தினர் தெய்வங்களாக வழிபட்டு வந்தார்கள் அதுவே அம்மன் தெய்வ வழிபாடு என்று பின்னாளில் வழி வழியாக தோன்றி வந்தது.

இந்தியாவில் இயேசு பிறந்த அதே நூற்றாண்டில் முதல் முதலாக இயேசுவின் நேரடி சீடரான புனித தோமையார் கேரளாவில் கால் பதித்தபோது கிறிஸ்தவ மதம் துளிர்விடத் தொடங்கியது. அதன்பின் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் புனித தோமையாரால் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டு அதன் வாசலில் திருமுழுக்கு தொட்டியும் புனித தோமையாரால் நிறுவப்பட்டது. அதற்குப்பின் சென்னை மயிலைக்கு வந்த தோமையார் இங்கிருந்து கிறிஸ்துவை மக்களுக்கு அறியச் செய்தபோது கொலை செய்யப்பட்டு சென்னையிலேயே இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.

அதற்கு அடுத்ததாக தமிழகத்திற்கு 1710 ஆம் ஆண்டு வந்த 'கான்ஸ்டான்சோ பெஸ்க்கி' என்ற இத்தாலிய நாட்டிற் பிறந்த கிறிஸ்த்தவ போதகரான இவர் தனது முப்பதாவது வயதில், கிறித்தவ மதத்தின் போதனைகளை நம் மக்களுக்குப் போதிக்க வேண்டி, இனிய தமிழின்பால் ஈர்க்கப்பட்டு. தமிழ் இலக்கண இலக்கியங்களில் நாட்டம் கொண்டதில் 'சுப்பிரதீபக்கவிராயர்' என்பவரிடம், தமிழினை முறைபடி முழுமையாகக் கற்றுத் தேர்ந்தார். மேலும் பல தமிழ் இலக்கியச் சுவடிகளை பல இடங்கள் சென்று சேகரித்தவர், நாளடைவில் 'சுவடி தேடும் சாமியார்' என்றும் அழைக்கப்பட்டதாக சில கூற்றுகள் ஏட்டில் காணப்படுகின்றன.

பின்னர் இவர் '' வீரமாமுனிவர்'' என்று பெயர் மாற்றம் பெற்று கிறிஸ்துவத்தை தமிழ் மக்களிடையே மனதில் பதிய செய்ய அவர்களின் கலாச்சார படியும், அவர்களின் மத வழக்கப்படியும், அவர்களின் வழிபாட்டு முறைகளின் படியும் அன்னை மரியின் பக்தியை மக்கள் மனதில் பதிய செய்தார். அவர் தமிழக மக்களின் கலாச்சாரத்திற்கு ஏற்ப அவர்களின் வழிபாட்டு முறையில் இருந்து சற்றும் மாறுபடாமல் மரி அன்னையை தமிழக பண்பாட்டின் அடையாளமாக உருமாற்றிக் காட்டினார். உதாரணமாக அன்னைக்கு தமிழக மக்களின் ஆடை அணிகலன்களை அணிவித்து மரியன்னை ஒரு தமிழ் மகளாக அறியச் செய்தார். அதுமட்டுமல்லாமல் இப்பக்தி முயற்சியின் அடையாளமாக தமிழக மக்களின் வழக்கப்படி அன்னையின் திரு உருவத்தை தேரில் இருக்கச் செய்து மக்கள் வாழும் சாலைகள் இடையே பவனி வரச் செய்து திருவிழாக்கள் கொண்டாடப்பட





## அன்னையின் (8) திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### அன்னை மரியாள் பேராலயம், எர்ஃப்பர்ட், ஜெர்மனி

கிறிஸ்தவ சமய வரலாற்றில் தப்பறை கொள்கைளும், சீர்திருத்தங்களும் பல்வேறு பிளவுகளையும், பிரிவினைகளையும் உருவாக்கியுள்ளன. வரலாற்றின் மத்திய காலத்தில் அதாவது 15ஆம் நூற்றாண்டில், கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் சீர்திருத்த கொள்கைகளை முன்னெடுத்த மார்டின் லூதரை எவரும் மறக்க இயலாது. இவர் பிறந்த ஜெர்மனி தேசம், இவரின் கொள்கைகளின் தாக்கத்தால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் மூழ்கியது என்று சொல்லலாம்.

மத்திய ஜெர்மனியில் துருங்கியா மாகாணத்தின் மிகப்பெரிய நகரம் எர்்.ப்பர்ட் ஆகும். இயற்கைவளம் நிறைந்த இப்பகுதியில் எங்கு நோக்கினும் பரந்து விரிந்து இருக்கும் காடுகளும், குன்றுகளும் நம் சிந்தையை கவருவதாக அமைந்துள்ளன. கேரே நதியின் கரையில் இந்நகரம் அமைந்துள்ளது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள குன்றின்மீது அமைந்துள்ள பேராலயம் இறைவனின் தாய் அன்னை மரியாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. உலகின் பல இடங்களில் அன்னை மரியாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆலயங்கள் இருந்தாலும், கிறிஸ்தவ வரலாற்றில் தனித்துவம் மிக்க இடத்தை இந்த ஆலயம் பெறப்போகிறது என்று அந்நாட்களில் எவரும் கற்பனைகூட செய்திருக்கமாட்டார்கள். வானுயர்ந்து நிற்பதாலோ, அழகு மிக்க ஓவியங்களும், சிற்பங்களும் இருப்பதோடு, இப்பேராலயத்தில் மார்டின் லூதர் என்ற அகுஸ்தீனிய துறவி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் என்பதே காரணமாகும்.





ஐரோப்பா கண்டத்தில் கிறிஸ்தவம் தழைத்தோங்கியிருந்த காலத்தில், பேராலய குன்று என்றழைக்கப்படும் இவ்விடத்தில் கி.பி. 752ஆம் ஆண்டில் புனித போனிபாசின் விருப்பப்படி ஒரு ஆலயம் எழுப்பபட்டது. அதுவே, அந்நகரின் பேராலயமாகவும், ஆயரின் தலைமையிடமாகவும் உருவெடுத்தது. கி.பி 1153ஆம ஆண்டு ஏற்பட்ட ஒரு இயற்கை பேரழிவின் காரணமாக அவ்வாலயம் முழுவதுமாக தகர்ந்தது. தங்களின் வழிபாட்டுத் தலம் இடிந்துபோனது குறித்து மக்கள் மிகுந்த கவலையடைந்தனர். தங்களின் பாதுகாவலரான புனித போனிபாசின் பரிந்துரையை நாடிச் செபித்தனர். புனிதர்களின் திருப்பண்டங்களை வணங்கி, வேண்டுவது மிகுந்திருந்த அந்நாட்களில், புனித போனிபாசின் சீடர்களான புனித அதேலாரியோ மற்றும் எபோனோவின் திருப்பண்டங்களை தரிசிக்க வந்த இறைமக்களின் தாராள மனதும், புதிய ஆலயம் எழுப்பவேண்டும் என்னும் தீராத ஆவலும் புதிய ஆலயம் எழும்ப காரணமாக அமைந்தன. அப்பகுதியின் நிலப்பிரபுவின் ஆதரவு ஆலயப்பணிகளை விரைந்து நடத்த உதவியாக இருந்தது. கி.பி. 1170ஆம் ஆண்டு பேரரசர் பெதரிகோ பர்போஸா, மூன்றாம் லுதோவிகோவை துரிங்கியா மாகாணத்தின் ஆளுநராக நியமித்தார். அவரின் பணியேற்பு வைபம் ஏறக்குறைய பணிகள் நிறைவுற்றிருந்த இந்த ஆலயத்தில்தான் நிகழ்ந்தேறின. பணிகள் முழுவதுமாக முடிந்த பின், கி.பி 1182ஆம் ஆண்டு ஜீன் 20ஆம் தேதி ஆலயத்தின் அர்ச்சிப்பு சடங்கானது மிகுந்த கோலாகலமாக வைபங்களுடன் நடந்தேறின.



உரோமானிய கட்டிட கலையில் சிலுவை வடிவில் கட்டப்பட்டிருந்த இவ்வாலயமானது காலப்போக்கில் பழுதடைந்தாலும், இன்று காணப்படும் உயர்ந்த மணிக்கூண்டுகளை உடைய பேராலயத்தின் அடித்தளமாக இந்த ஆலயத்தின் அடித்தளம்





அவற்றில் ஒன்றுதான் அவரின் புனிதத் தன்மை அல்லது பரிசுத்த நிலை. மரியாவின் தூய்மையை புனிதத் தன்மையினைப் பற்றி கிறிஸ்தவத்தின் தொடக்கக் காலத்திலிருந்தே பல விவிலிய அறிஞர்களும், திருத்தந்தையர்களும், திருச்சங்கங்களும் ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளனர். மரியா இறைமகன் இயேசுவின் மீட்பின் முதற்கனி என்கிறார் டான் ஸ்காட்டஸ். அவரது பரிசுத்தமே இதற்கு காரணம் எனவும் அவரே சொல்கிறார்.

மரியா எல்லாவற்றையும் தன் மனதில் இருத்தி சிந்தித்து வந்தார்.(லூக் 2:19) தன்னுடைய வாழ்வில் இறைவனின் திட்டத்தை செயல்படுத்தியதில் கருத்தாய் இருந்தார். எனவேதான் மரியாவை அருள் மிகப் பெற்றவரே நீ வாழ்க என இறைவனே வாழ்த்துகின்றார். சாதாரணப் பெண் கடவுளின் தூதரால் வாழ்த்துப் பெற்றது எப்படி? அவர் இறைவிருப்பத்தை நிறைவேற்ற உடன்படுவார் என்ற கடவுளின் நம்பிக்கையும் அவர் கடவுளின் மீது கொண்ட மாறாத அன்புமே இதற்கு காரணம் ஆகும்.

அழைப்பு பொதுவானது

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தூய வாழ்வு வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பது திருச்சபை நமக்கு அறிவுறுத்தும் தெளிவான கருத்து. அதை நாம் உணர்கின்றோமா? உணர்ந்ததை செயல்படுத்துகின்றோமா? தூய வாழ்வு வாழும்போது பாவத்தின் அடிமைத் தளையிலிருந்து நாம் விடுதலை பெறுவது மட்டுமன்று கடவுளை பிறருக்கு வெளிப்படுத்துகின்றோம். இங்ஙனம் கடவுளின் இறைச் சாயல் மனிதரில் மிளிர்கிறது. தூய வாழ்வு என்பது ஏதோ மற்ற மனிதரிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டும் ஒன்று அல்ல மாறாக மற்றவர்களோடு சேர்ந்து வாழ்ந்து மற்றவரில் இறை சாயலை கண்டுணரும் வாழ்வு என புரிந்து கொள்ள வேண்டும். மரியா தூயோராய் இருந்ததாலே அவர் மனிதர் எல்லாரிலும் இறைச் சாயலை காண தன் உதிரத்தையே இறைமகனுக்கு உறைவிடமாகத் தந்து மனித உருவில் இறைவன் பிறக்க உதவி நின்றாள். ஆகவே மரியாவை புனித மரியே என்பதில் நமக்கெல்லாம் பெருமை உண்டு என்பதறிந்து அவரைப் புகழ்வோம். நாம் தூயோராய் வாழ அன்னை தந்த 3 பாடங்கள்

1. தூயோராய் வாழ்வதென்பது முழுமையான அர்ப்பணம்.
2. தூயோராய் வாழ்வதென்பது அடுத்தவர் நலனில் அக்கறை.
3. தூயோராய் வாழ்வதென்பது கடவுளின் அன்பில் அசைக்க முடியாத நம்பிக்கை.

படுத்தும் வகையில் திருச்சபை சூடும் பொன்மகுடமே இந்த புனித என்ற விளிப்புச் சொல். இந்த சொல் பல்வேறு விதங்களில் அழைக்கப்படுகிறது. அதாவது பரிசுத்த, தூய, அர்ச்சிக்கப்பட்ட எனப் பல பெயர்களை கொண்டு அழைக்கப்படுவது நாம் அறிந்த நடைமுறை உண்மை.

ஐயா தர்மபிரபு என்று கஞ்சத்தனமாய் வாழ்பவர்களை இந்த சமூகம் மறந்தும் அழைப்பதில்லை. அதைபோலவே மரியாவுக்கும் புனித என்ற மணிமுடி வெறுமனே தரப்பட்ட ஒன்றல்ல. தர்மபிரபு என்பது எப்படி தர்மம் செய்வதை சுட்டிக்காட்டுகிறதோ அவ்வாறே புனித மரியே என்று உரைக்கும்போது மரியாவின் புனித, மாசற்ற, உயர்ந்த, அற்புதமான, மரியாவின் இயல்பை உரைக்கின்ற சொல்லாக நாம் புரிந்து கொள்ளலாம்.

**மானிடப் பெண்ணுக்கு மணிமுடி ஏன்**

பிறப்பு நிலை பாவத்துடன் பிறந்த மனிதர்களின் நடுவே மரியா என்ற மானிடப் பெண் ஒருவர் மட்டும் பாவமேதும் இல்லாமல் அமல உற்பவியாக பிறந்தார். மேலும் இறைப் பிரசன்னத்தில் எப்போதும் வாழ்ந்தார். இதோ ஆண்டவரின் அடிமை, உமது வார்த்தையின்படியே ஆகட்டும் (லூக்2:38) என்று தன் இறுதி மூச்சு வரை வாழ்ந்தார். வெறும் வார்த்தையோடு நிற்கவில்லை மாறாக வாழ்க்கையில் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றினார். வேறுவகையில் சொல்லப்போனால் இறைவன் தான் விரும்பியதை இக்கன்னி வழியாக செய்து முடித்தார். ஏனெனில் மனிதர் என்ற முறையில் ஒரு கன்னிப் பெண் கரு சுமக்க முடியுமா? மனிதர் என்ற முறையில் உலகைப் படைத்த இறைவனுக்கே உரு கொடுக்க முடியுமா? ஆகவே இது வெறும் மனித நிலையில் மனிதரால் நிகழ்த்தப்பட்ட நிகழ்வு அல்ல. மாறாக இது இறைவனின் விருப்பம். இறைவனின் செயல். அதாவது முடிந்ததை மட்டுமே செய்ய முனைகின்ற மனிதரிடத்தில் இறைவன்தான் விரும்பி செய்த செயல்.

திருத்தந்தை 23-ம் ஜான் புனிதர்களைப் பற்றிக் கூறும்போது கத்தோலிக்க மரபின்படி புனிதர்களுக்கு காட்டும் வணக்கம் வெறும் மரியாதை மட்டுமல்ல. அல்லது வேளாவேளையில் எழுப்பும் சிறுசிறு மன்றாட்டு அல்ல. மாறாக அவர்களுடன் நமக்குள்ள ஆழ்ந்த ஞான உறவு ஆகும். அவர்கள் நமக்குத் தந்துள்ள விலைமதிக்கப் பெறாத முன் மாதிரியும் பாடமும் ஊக்குவிக்கும் உதவிகளும் ஆகும், என்கிறார். மரியா இயேசுவை மாதிரியாகக் கொண்டு செயல்பட்டதில் முதன்மையானவர் என்பது மறக்க முடியாத உண்மை. அதுமட்டுமல்ல அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன.







அமைந்தது. தென்புறத்தில் உள்ள மணிக்கூண்டு கி.பி 1201ஆம் ஆண்டும், வடபுறத்தில் உள்ள மணிக்கூண்டு கி.பி. 1237ஆம் ஆண்டும் கட்டிமுடிக்கப்பட்டன.

பேராலயத்தில் வழிபடுவோரின் எண்ணிக்கை மிக அதிகமானதால், கி.பி. 1280ஆம் ஆண்டு குருக்கள் செபிக்கும் பகுதியை உயர்த்திக் கட்டும் பணிகளானது தொடங்கியது. இப்பணிகள் கி.பி. 1290ஆம் ஆண்டு நிறைவுற்றது. இப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே ஆலயத்தில் மையத்தில் ஒரு மணிக்கூண்டு கட்டும் பணிகள் தொடங்கப்பெற்று, அப்பணியும் கி.பி. 1307ஆம் ஆண்டு நிறைவுற்றது. இம்மையக்கூண்டில், மத்திய காலத்தின் மிகப்பெரிய மணியாக கருதப்படும் 'குளோரியோஸா" என்ற மணியானது நிறுவப்பட்டது. இம்மணியானது 2.5 மீட்டர் உயரமும் 11,400 கிலோ எடையுள்ளதுமாக அமைந்தது.

14ஆம் நூற்றாண்டில் இறைமக்களின் வசதிக்காக ஆலயமானது விரிவுபடுத்தப்பட்டது. ஆலயப்பீடத்தின் பின்புறம் அமைந்துள்ள துறவியர் செபிக்கும் பகுதியானது அரைவட்ட வடிவில் கட்டப்பட்டு அதிக நபர்கள் அமர இடம் ஏற்பாடுசெய்யப்பட்டது. இந்த விரிவுபடுத்தப்பட்ட பகுதியானது கி.பி. 1372ஆம் ஆண்டு எர்ஃப்பட் துணைஆயர் மேதகு. கோஸ்தான்சா பிரெதெரிக் அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

இப்பகுதியில் அமைந்துள்ள வண்ணக்கண்ணாடிகளின் ஓவியங்கள் வடிக்கும் பணியானது கி.பி 1372ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கி.பி. 1420ஆம் ஆண்டு நிறைவுபெற்றன. இவ்வாலயத்தில் இத்தகைய 15 வண்ணக்கண்ணாடி ஓவியங்கள் வடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வண்ணக்கண்ணாடி ஓவியமும் 895 முதல் 1100 வண்ணக்கண்ணாடி துண்டுகளால் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கண்ணாடி ஓவியமும் 18.6 மீட்டர் உயரமும், 2.6 மீட்டர் அகலமும் உடையன. மையப்பகுதியில் அமைந்துள்ள கண்ணாடி ஓவியங்களில் அன்னை



மரியாவின் வாழ்க்கையின் நிகழ்வுகளும், இடதுபகுதியில் உள்ள ஓவியங்களில் படைப்பின் தொடக்கம் முதல் பாபேல் கோபுர நிகழ்வு வரைக்கும் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளன. வலதுபகுதி ஓவியத்தில் முதுபெரும்



தந்தையர்களான ஆபிரகாம், யாக்கோபு மற்றும் ஈசாக்கு ஆகியோரின் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. இறுதியாக உள்ள சன்னல் கண்ணாடியில் கன்னியர் குழுமம் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. வடக்குபுற சன்னலில் திருத்தூதர்கள் மற்றும் மறைசாட்சியர்களின் படங்களும், புனிதர்களான கத்ரீனா, யுஸ்தாக்கியோ, பொனிபாசோ மற்றும் ஹெலேனா ஆகியோர் வாழ்க்கை சரிதங்கள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

ஆலயத்தின் வடபுறத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள படிகளில் ஏறும் வகையில் ஆலயத்தின் மைய கதவு அமைந்துள்ளது. ஆலயத்தின் மையக் கதவிலிருந்து பார்த்தால் நகரின் ரம்யமான அழகை கண்டு ரசிக்கலாம். இந்த நுழைவாயில் இரு கதவுகளை கொண்டுள்ளது. இந்த முகப்பு அற்புதமான சிற்பங்களால் நிறைந்துள்ளது. நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பத்துக் கன்னியர், திருத்தூதர்களின் உருவங்கள், சிலுவையில் மரித்துத் தொங்கும் இயேசு என ஆலய முகப்பு தொடங்கி, ஆலய மையப்பீடத்தின் பின்புறம் அமைந்துள்ள வண்ணக்கண்ணாடி ஓவியங்கள் வரை, விவிலிய நிகழ்வுகள், அன்னை மரியாவின் வாழ்க்கை, புனிதர்கள், மறைசாட்சியர், மற்றும் திருஅவையின் நம்பிக்கை ஆகியவற்றை எடுத்தியம்பும் ஒரு மறைகல்வி ஏடாகவே அமைந்துள்ளது.

இத்தகைய அழகுமிக்க ஆலயத்தில் பல அற்புதமான ஓவியங்கள் இருந்தாலும், ஒரு ஓவியம் என்னை கவர்ந்தது. எனக்கு தெரிந்த வகையில் முதன் முறையாக இப்பேர்ப்பட்ட ஒரு ஓவியத்தை நான் பார்த்தேன். அவ்வோவியம் "துயருறும் தந்தையின் ஓவியம்", மைக்கேல் ஆஞ்சலோவின் 'பியதா' என்றழைக்கப்படும் இறந்த மகனை மடியில் தாங்கியிருக்கும் சிற்பம் போல், இந்த ஓவியத்தில் தந்தையாம் கடவுள் இறந்த இயேசுவின் உடலை கரங்களில் தாங்கி மடியில்

ஆகட்டும்





# மாதா மன்றாட்டு மாலை

2



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

2. புனித மரியே

அன்னை மரியாவை பல முறைகளில் பல வழிகளில் அழைத்து அவரைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறது நம் உள்ளம். மரியாவின் மன்றாட்டு மாலையில் அவரை புனித மரியே என அழைப்பது ஏன்? என்பதே நம் தேடலின் மையம். தேடுங்கள் கண்டடைவீர்கள் (மத்7:7) என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தைகளில் எள்ளளவும்கூட சந்தேகமில்லாமல் தேடலின் பயணத்தை நம்பிக்கையோடு தொடங்கியிருக்கின்றோம். கண்டடைவோம் என்ற நம்பிக்கையில்.

**வெறும் அடைமொழியா?**

தமிழ் மொழியின் சிறப்புக் கூறுகளுள் அடைமொழியும் ஒன்று. அடைமொழி என்பது ஒரு மனிதர், இடம், சூழல் ஆகியவற்றை சிறப்பித்துக் கூறுவதாகும். மேற்க்குறிப்பிட்ட வாக்கியத்தின் உள்ளொளியில் பார்த்தோமேயானால் நாம் தியானித்துக் கொண்டிருக்கும் புனித மரியா என்ற சொற்களிலுள்ள ஒலிப்பும்கூட ஒரு வகையில் அடைமொழியாய் மட்டும் கருதப்பட இருக்கிறது. ஆனால் இச்சொற்கள் உணர்த்தும் உண்மை இன்னும் உயர்வானது, உன்னதமானது என்றால் பொய்யல்ல.

புனித என்ற சொல் இலவசமாக வழங்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக மறைசாட்சியர்களின் இரத்தத்திற்கு அளிக்கப்பட்ட மதிப்பை இறை விருப்பத்தை தங்களுடைய விருப்பமாய்க் கொண்டு வாழ்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட வணக்கமாகும். இறைச் சாயலையும் பாவனையையும் கொண்ட மனிதத்தை முழுமையாய் வாழத் தங்களுக்குள்ளே முயற்சி செய்தவர்களுக்காக தரப்பட்ட முகவரி இறைவாக்கின் பொருளுணர்ந்து தம் இதயம் மாற்றியது மட்டுமல்லாது பிறருடைய இதயங்களையும் மாற்றுவதில் முனைப்போடு செயல்பட்டவர்களுக்கு சூட்டப்பட்ட முடி. ஆகவே புனித மரியே என்று மரியாவை அழைப்பது வெறும் அடைமொழி மட்டுமல்ல மாறாக அவர் வாழ்ந்த வாழ்வுக்கான பரிசு ஆகும்.

**மரியாவுக்கு மணிமுடி**

மண்ணகம் அல்ல விண்ணகமே நம் இலக்கு என்று செயல்பட்டு மண்ணில் மடிந்து விண்ணில் விருட்சமாய் பரந்து நின்றவர்களை மாட்சிப்

ஆகட்டும்



## வணக்கத்துக்குரிய ஜோவாக்கினோ (அந்தோணி) ம.ஸ்டெவான்

O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச


அந்தோணி ஸ்டெவான், வளந்தினோ மற்றும் லூசியா என்கிற தம்பதியருக்கு நான்காம் குழந்தையாக, 1921 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள், இத்தாலி நாட்டில் உள்ள நோவே தி பஸ்ஸானோ என்கிற சிறிய ஊரில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே, பங்கு பணிகளில் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார். தன்னுடைய 9 ஆம் வயதில் கத்தோலிக்க செயல் (Catholic action) என்கிற அமைப்பில் சேர்ந்து பல்வேறு சமூக பணிகளிலும், ஆன்மீக பணிகளிலும் சிறப்பாக பணியாற்றினார். இந்த அமைப்பின் விருது வாக்கான செபம், செயல், தியாகம் என்ற இந்த மூன்றையும் தனதாக்கிக் கொண்டார். தனது தந்தையின் ரொட்டி கடையில், ரொட்டி செய்து கொண்டே, பல்வேறு சமூக ஆன்மிக பணிகளில் தன்னையே இந்த சிறு வயதில் ஈடுபடுத்திக்கொண்டார். 1940 ஆம் ஆண்டு தன்னுடைய 19 ஆம் வயதில், இத்தாலிய ராணுவத்திற்க்காக பணியாற்ற தேர்வு செய்யப்பட்டார். இதனால், இரண்டாம் உலகப்போரில், 1943 ஆம் ஆண்டு வரை, பல நாடுகளுக்கு சென்று பணிசெய்ய கட்டாயம் அவருக்கு வந்தது. இவருடன் பணி செய்த சக ராணுவ வீரர்கள் இவரைப் பற்றிக் கூறும் பொழுது, இவர் மற்ற ராணுவ வீரர்களை போல் அல்லாமல், கனிவோடும் இரக்கத்தோடும் இருந்ததாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்வதில் கருத்தாய் இருந்ததாக நமக்கு தெரிவுபடுத்தினர். 1943 ஆம் ஆண்டு ராணுவத்திலிருந்து திரும்பி வந்த பின், தன்னுடைய தந்தையோடு சேர்ந்து ரொட்டி கடையை நடத்தி வந்தார். திருமண வரன்கள் தயாராக இருந்தும், ஒரு துறவியாக மாற வேண்டும் என்கிற ஆசை அவரிடம் இருந்து கொண்டே இருந்தது. எனவே, வரன்களை தவிர்த்துவிட்டு, 1947 ஆம் ஆண்டு மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். விசென்சா என்கிற நகரத்தில் உள்ள நமது மரியின் ஊழியர் குடும்பத்தில் தன்னுடைய, துறவற வாழ்வைத் தொடங்கினார். 1948 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் மரியின் ஊழியர் ஆடையை ஏற்றுக்கொண்டு, தனது பெயரை ஜோவாக்கினோ என்று மாற்றிக்கொண்டு, நவதுறவு ஆண்டை தொடங்கினார். எதிர்பாராதவிதமாக, காசநோய் மூளைக்காய்ச்சல் அவரை தாக்கியது. அதனால், அவர் பல உடல் வலிகளுக்கு உள்ளானார். இருந்தாலும், மற்றவர்களோடு கனிவோடும், இரக்கத்தோடும் பழகுவதில் தவறவில்லை. 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவருடைய உடல், மோந்தே பெரிகா துறவற இல்லத்தில் உள்ளது. இன்றும் மக்கள், இவருடைய மன்றாட்டைக் கேட்டு இவருடைய கல்லறையை சந்திக்கிறார்கள். இவர் எழுதிய பல சிந்தனைகள், இவருடைய அறையிலிருந்து எடுக்கப்பட்டு, வாசிக்கப்பட்டன. அப்பொழுதுதான், எந்த அளவுக்கு, இவர் ஆன்மீக முதிர்ச்சியை பெற்றிருந்தார் என்பது நமக்கு தெரிய வந்தது. இதைப் பரிசீலனை செய்து, 1997 ஆம் ஆண்டு, ஏப்ரல் 8 ஆம் நாள், இவருக்கு வணக்கத்துக்குரியவர் என்கிற மதிப்பை திருஅவை அறிவித்தது. தியாக உணர்வோடு வாழ்ந்து, கிறிஸ்துவை நம்மோடு வாழ்பவர்களுக்கு காட்ட வேண்டும் என்பதற்கு, பல வருடங்கள் தேவையில்லை, எந்த சூழ்நிலையிலும், கிறிஸ்துவுக்கு சான்று பகிரலாம் என்பதற்கு, நமது வணக்கத்துக்குரிய ஜோவாக்கினோ ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.





வளர்த்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. புத்திர சோகம் என்று தமிழில் நாம் கூறுவதுண்டு. அத்தகைய சோகத்தை அந்த ஓவியத்தை கண்டு தியானிக்கிற போது நம்மிலும் உணரமுடியும்.

மார்டின் லூதரின் போதனைகள் கிறிஸ்தவத்தின் வரலாற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் அசைக்க முடியாத அடையாளமாக இந்த அன்னை மரியாள் பேராலயம் திகழ்கிறது. ‘அன்னை மரியாவை அறியாதவர் கிறிஸ்துவை அறியமுடியாது’ என்ற திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் கூற்று எவ்வளவு சரியானது என்பதை





இப்பேராலயங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.


சரித்திர புகழ்மிக்க இப்பேராலயத்தையும், நகரின் எழிலைக் காண உதவிய தங்கை வசந்தமேரி மற்றும் தம்பி கிருபாகரனுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தெளிந்த சிந்தனையும், நேர்கொண்ட பார்வையும், கடின உழைப்பும் இருந்தால் வாழ்வில் எத்தகைய உயரத்தையும் அடையலாம் என்பதற்கு இந்த இளம் உள்ளங்கள் ஒரு சான்று. இறைவன் இத்தகைய இளம் உள்ளங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## விடுதலை பயணம் 21 - 40



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

3) திருஉறைவிட அமைப்பையும் அதன் அனைத்துப் பொருள்களின் அமைப்பையும் நான் உனக்குச் சொல்லிக் காட்டுகிறபடியெல்லாம் …………

4) நான் உங்களைச் சந்தித்து உன்னிடம் பேசுகின்ற சந்திப்புக் கூடார நுழைவாயிலில், அது உங்கள் ……………. என்றுமுள்ள எரிபலியாக ஆண்டவர் திருமுன் நடந்தேறட்டும்

7) அவ்வாறே மக்கள் எல்லோரும் தங்கள் பொற் காதணிகளைக் கழற்றி, அவற்றை ……….. கொண்டு வர்,

8) ஆறு நாள்கள் நீங்கள் வேலை செய்யலாம். ஏழாம் நாளோ, ஆண்டவருக்காக நீங்கள் ஓய்ந்திருக்க வேண்டிய புனிதமான 'சாபாத்து': அன்று வேலை செய்பவன் ………… கொல்லப்பட வேண்டும்.

13) இதைக்கேட்டு ஆண்டவர் மோசேயின் மேல் சினம் கொண்டு பின்வருமாறு கூறினார் லேவியனான ஆரோன் உனக்குச் சகோதரன் அல்லவா……….. நாவன்மை உடையவன் என்று எனக்குத் தெரியும். இதோ அவன் உன்னைச் சந்திப்பதற்காக வந்து கொண்டிருக்கிறான். அவன் உன்னைக் காணும்போது மனமகிழ்வான்.

**இடமிருந்து வலம்**

1) ஒருவன் தன் மகளை அடிமையாக விற்றிருந்தால், ஆண் ………. வெளியேறிச் செல்வதுபோல் அவள் செல்லலாகாது.

2) மோசே மட்டும் ஆண்டவர் அருகில் ……….. ஏனையோர் அருகில் வரலாகாது: மக்கள் அவரோடு மலை மேலேறி வரக்கூடாது' என்று கூறினார்.

5) பன்னிரு மணிக்கற்கள…………. எடுத்து அவற்றின்மேல் இஸ்ரயேல் புதல்வர் பெயர்களைப் பொறித்துவைப்பாய்.

6) ஓய்வுநாளைக் கடைபிடியுங்கள். அது உங்களுக்குப் புனிதமானதாகும். அதன் தூய்மையைக் கெடுப்பவன் கொல்லப்படவே வேண்டும். அந்நாளில்





**மன்றாட்டுக்கள்**

**1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் மூன்று கீழ்த்திசை ஞானிகளுக்கு வழிகாட்டிய விண்மீனைப்போல ஒருவர் ஒருவருக்கு வழிகாட்டிகளாக இருந்து ஒளியின், உண்மையின் மக்களாக வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.**

**2. அன்பின் இறைவா! மூன்று ஞானிகள் வெறும் பரிசுப் பொருட்கள் மட்டுமல்ல, தங்களையே முழுமையாக உமக்கு அர்ப்பணித்தது போல, நாங்களும் எங்கள் சொல், செயல், உடல், ஆவி அனைத்தையும் உமக்கு அர்ப்பணித்து வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.**

**3. அன்பின் இறைவா! விண்மீன் மறைந்தவுடன் ஞானிகள் கடவுளையும் தங்களையும் சபித்துவிட்டு வீடு திரும்பவில்லை. மாறாக மற்றவர்களது வழியைத் தேடினர். நாங்களும் எங்களது வாழ்வுப் பயணத்தில் தொடர் துன்பங்கள் மற்றும் வேதனைகள் வரும்போது எங்களைவிட ஆன்மீகத்தில் ஆழம் கண்டவர்களின் உதவியை நாடி விசுவாசப் பயணத்தில் எம் இலட்சியத்தை அடைய துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.**

**4. அன்பின் இறைவா! புனித பவுலை போல நாங்களும் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சாட்சியம் பகிரவும், எல்லோரும் இறைவனால் மீட்கப் பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.**



விடாமுயற்சியோடு போராடி இறுதி இலக்குவரை உள்ளத்தில் உண்மையாக உறைந்திருக்கின்ற உன்னதரான இறைவனை அடைவதே பயணத்தின் நிறைவாகும். மூன்று ஞானிகள், துன்ப துயரங்களைக் கடந்து இறுதியில் இயேசுவைக் கண்டு மகிழ்ந்தனர். மீட்பு என்பது இஸ்ராயேல் மக்களின் தனி உடமை அல்ல, மாறாக அது எல்லா இனத்தாருக்கும் உரிய பொதுவுடமையாகும். பிற இனத்தவரும் இறைவனுடைய மீட்புக்கு உரியவர்கள் என்பதுதான் இன்றைய பெருவிழாவின் மையக்கருத்தாகும்.

மாந்தர் அனைவரும் இறைவனைத் தேடி வந்து அவரைக் கண்டுகொள்வார்கள் என்ற கருத்தைத்தான் இன்றைய மூன்று வாசகங்களும் வலியுறுத்துகின்றன. வானதூதரின் செய்தியைக் கேட்ட இடையர்கள் தேடிச் சென்று இறைவனை சந்தித்தனர். விண்மீன் அடையாளத்தைக் கண்ட கீழ்த்திசை ஞானிகள் தேடிச் சென்று காணிக்கை செலுத்தி இறைவனை வணங்கி மகிழ்ந்தனர். ஆலயத்தில் சிமியோன், அன்னா இறைவனைக் கண்டுகொண்டனர். இவ்வாறு இறைவனின் மீட்பு பலருக்கு வெளிப்படுத்தப்பட்ட போதிலும் இயேசுவின் பிறப்பு அனைவருக்கும் உரியது என்பதையே புறவினத்து ஞானிகள் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. மீட்பு அனைத்து மக்களுக்கும் உரியது என்பதை உணர்ந்து, நமது சொல்லால், செயலால் பிற இன மக்களையும் கிறிஸ்துவிடம் அழைத்து வரும் விண்மீன்களாக நமது விசுவாசப் பயணத்தைத் தொடர்ந்திட தொடரும் இப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய அடிமைத்தளையாலே அழிந்த எருசலேமுக்கும், அல்லல்பட்ட இஸ்ராயேலருக்கும் ஆறுதல் மொழிகளாக எழுதப்பட்டன. எருசலேம் புத்துயிர் கொள்ளும் என்று நம்பிக்கையூட்டும் இன்றைய வாசகம் இயேசுவின் இறைக்காட்சியால் அனைத்து மக்களும் வாழ்வு பெறுவர் என்பதைக் காட்டுகிறது. எருசலேமின் மகிமையைக் கண்டு புறவினத்தார் அதை நோக்கி ஓடி வந்ததுபோல, பெத்லகேமில் இயேசுவின் ஒளியைக் காண கீழ்த்திசை ஞானிகள் வந்ததுபோல, நம்முடைய நடை, உடை, பாவனைகளிலே, சொல் செயல்களிலே கிறிஸ்துவைக் காண, கண்டு அனுபவிக்கப் பிற மக்கள் வரவேண்டும். இதற்கான வரம் வேண்டியவர்களாய் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கீழ்த்திசை ஞானிகள் பாலன் இயேசுவைக் கண்டு ஆராதித்தது ஒரு அடையாளம், ஒரு மறைபொருள். யூதருக்கு மட்டும் இயேசு அரசரன்று மக்களினத்தார் அனைவருக்கும் அவர் மன்னர் என்பதை உணர்த்தும் வண்ணம் ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா அமைகிறது. பவுல் அடியாரும் இம்மறைபொருளின் கருத்தை அறிந்து, புறவினத்தாருக்காகப் பாடுபட்டு உழைப்பதை இவ்வாசகம் விளக்குகிறது. கவனமுடன் செவிகொடுப்போம்.





வேலை செய்பவன் ...........- தன் மக்களிடமிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும்.

9) பணியாளருள் கலைத்திறமைமிக்கோர் ......... ஒன்று சேர்ந்து திருஉறைவிடத்தைப் பத்துத் திரைகளால் அமைத்தனர்.

10) இவ்வாறிருக்க, யோசேப்பை ............. அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.

14) ஆண்டவர் உங்களைக் கவனித்துக் கொள்ளட்டும்! உங்களுக்குத் தீர்ப்பு வழங்கட்டும்! ஏனெனில், பார்வோன் முன்னிலையிலும் அவனுடைய அலுவலர் முன்னிலையிலும் நம்மவர் வாடையே பிடிக்காதவாறு நீங்கள் செய்து விட்டீர்கள்! நம்மைக் கொல்வதற்கான வாளை அவர்கள........... வைத்துவிட்டீர்கள்' என்றனர்.

### மேலிருந்து கீழ்

1) பிறருடைய மேலாடையை அடகாக நீ வாங்கினால், கதிரவன் மறையுமுன் அதை ............ திருப்பிக் கொடுத்துவிடு.

3) திருஉறைவிடத்திற்காகச் சட்டங்கள்............ தெற்குப்பக்கம் தென்திசை நோக்கி நிற்க வேண்டியவை இருபது சட்டங்கள்.

5) காளையின் இரத்தத்தை எடுத்து, பலிபீடத்தின் கொம்புகளில் உன் விரலால் பூசியபின், மீதி ............முழுவதையும் பலிபீடத்தின் அடித்தளத்தில் ஊற்றிவிடு.

8) என் தலைவரே! நீர் எங்களோடு வந்தருளும். எங்கள் கொடுமையையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும் ..........

9) மேசையைத் தூக்கிச்செல்லும் தண்டுகள் தாங்கும் இவ்வளையங்கள் சட்டத்தின்............ இருந்தன.

15) ஆண்டவர் மோசேயை நோக்கி, 'பார், நான் உன்னைப் பார்வோனுக்குக் கடவுளாக வைத்துள்ளேன். உன் சகோதரன........... உன் வாக்கினனாக இருப்பான்.

### கீழிருந்து மேல்

2) கையூட்டு வாங்காதே. கையூட்டு, பார்வையுடையவரையும் குருடராக்கும். நேர்மையாளரின் ............... புரட்டிவிடும்.

4) பின்னர் அதைச் சார்ந்த சாம்பல் சட்டிகள், அள்ளுகருவிகள், பலிக் கிண்ணங்கள், முள்கரண்டிகள், நெருப்புத் .......... ஆகிய எல்லாக் கலன்களையும் வெண்கலத்தில் செய்வாய்.

6) நறுமணம் முகர்வதற்காக இதைப்போன்று செய்பவன் .......... தன் மக்களிடமிருந்து விலக்கி வைக்கப்படவேண்டும்' என்றார்.

7) அதற்கு ............ எனது பிரசன்னம் உன்னோடு செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்' என்று கூற,

10) முதல் மாதத்தில், ............ நாள், சந்திப்புக் கூடாரத்தின் திருஉறைவிடத்தை நீ எழுப்புவாய்.

11) இந்த நீண்ட காலத்தில் எகிப்திய மன்னன் இறந்துவிட்டான். இஸ்ரயேல் மக்களோ அடிமைத்தனத்தால் அழுது புலம்பினர். அடிமைத்தனத்தால் ஏற்பட்ட ............... முறையீடு கடவுளை நோக்கி எழும்பிற்று.

12) பின்னர் ஆண்டவர், 'உன் கையை உன் மடிக்குள் மறுபடியும் இடு' என்றார். அவ்வாறே அவரும் தம் கையை ........... மடிக்குள் இட்டார். மடியிலிருந்து அதை அவர் எடுத்தபோது, இதோ தம் உடம்பின் நிறமாகவே அது மாறிவிட்டிருந்தது.

13) வைக்கோல் உள்ளபோது செய்துவந்த ............. ஒவ்வொரு நாளுக்கும் உரிய வேலையை அன்றே முடித்துவிடுங்கள்' என்று கூறி, வேலை வாங்கும் அதிகாரிகள் அவசரப்படுத்தினர்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-12-2023**

# அன்னை மரியின் தாலாட்டு ⑧



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

ஆராரோ பாலகனே ஆராரோ
மாபரனைப் பெற்றெடுக்க நான்யாரோ?
தாலேலோ பாலகனே தாலேலோ
தேவனவர் தாயாக நான்யாரோ?

**I**

எத்தனையோ பெண்மணிகள் பூமியிலே பூத்திருக்க
ஏழ்மையான என்னிடமும் பூமிநாதன் பூத்ததுமேன்?
எத்தனையோ மாளிகைகள் யூதருக்குள் காத்திருக்க
ஏளனமாம் மாடடையில் யூதராசா பூத்ததுமேன்?

**II**

பட்டாடை பகட்டாடை மேனிதொட காத்திருக்க
ஓட்டாடை ஓட்டையாடை மேனிதொட வாய்த்ததுமேன்?
தங்கத்தேரும் பஞ்சணையும் தவமாகக் காத்திருக்க
தீனித்தொட்டி பாத்திரத்தில் படுத்துறங்கும் கேவலமேன்?

**III**

பீடையுடை பூமியிலே நீபிறக்க காரணமேன்?
வாடையுடை நாட்களிலே நீஉதிக்க காரணமேன்?
பாவியிடை பாத்திரமாய் நீவசிக்க காரணமேன்? - இந்த
தாயின்மடி பாக்கியமாய் நீவுதிக்க காரணமேன்?





**இரண்டாம் வாசக முன்னுரை**

ஒவ்வொரு குடும்பமும் நற்குடும்பமாய் வாழ அடிப்படைக் கடமைகள் சிலவற்றை எல்லோரும் நிறைவேற்ற வேண்டும் என்கிறார் புனித பவுல். இவ்வடிப்படைக் கடமைகளையெல்லாம் இணைத்து வைப்பது அன்பு. குடும்பத்தினர் இணைந்து இறைவன்முன் வருவதற்கு மிக உதவுவது செபம். செபிக்கின்ற குடும்பம் மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும் வாழ்கின்றது. குடும்ப உறுப்பினர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். கடவுளின் அன்புக்குரிய இறைமக்கள் என்ற உயரிய எண்ணத்தோடு வாழ்ந்திட அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் திருஅவை என்கின்ற ஆண்டவரின் குடும்பத்தின் உறுப்பினர்கள் என்பதை உணர்ந்து இறைவனின் மகிமைக்காகவும், திருஅவையின் வளர்ச்சிக்காகவும் உழைத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழும் குடும்பங்கள் உமது அன்பால் இணைக்கப்பட்டு ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும் வாழவும் அக்குடும்பங்களில் உமது தெய்வீக பிரசன்னத்தை மையப்படுத்தி அன்பின் குடும்பங்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா இன்றைய இளம்தம்பதியர்கள் ஒவ்வொருவரும் திருமணம் என்பது ஒரு அருட்சாதனம் என்பதை உணர்ந்து குடும்பங்களில் ஒருவரை ஒருவர் முழுமையாக அன்பு செய்து பொறுமையோடும், சகிப்புத் தன்மையோடும் தியாக மனநிலையோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா இன்றைய இளம் தலைமுறைகள் தங்களது பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்ந்து இறைவனுக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படிந்து பொறுப்புள்ள பிள்ளைகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகள், பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள் இவர்கள்மீது உமது ஆசீரைப் பொழிந்து அவர்களைப் பாதுகாத்து வழிநடத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருக்காட்சிப் பெருவிழா 07.01.2024

எசாயா 60:1-6 எபே 3:2-3,5-6 மத் 2:1-12

**முன்னுரை**

வாழ்க்கை ஒரு பயணம். குறுகிய கால வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு மேடு பள்ளங்களை சந்திக்கிறோம். இவைகளுக்கு மத்தியில்

## திருக்குடும்ப பெருவிழா(31.12.2023)

சீரா.ஞா 3:3-7,14-17 கொலோ 3:12-21 லூக் 2:41-52

**முன்னுரை**

குடும்பம் என்பது மனிதனை உருவாக்கும் பல்கலைக்கழகம். உறவைக் கற்றுக் கொடுத்த, உறவால் வாழ்வு தரும் தொட்டில். குடும்பம் மனித வாழ்க்கைக்கு ஓர் அத்தியாவசியத் தேவை. எனவேதான் கடவுள் ஆதாமை ஏவாளோடு இணைத்து வைத்து ஆசீர்வதித்தார். இயேசுவையும் ஒரு குடும்பத்தின் வழியாக அறிமுகப்படுத்தினார். குடும்பம் பார் மீது நம்பிக்கை கொள்ளவும் பாருக்கு நம்பிக்கை தரவும் சமுதாயத்தின் தலைவர்கள் உருவாக்கும் படைப்புக் கூடமாகும். கடவுளையும் மனிதனையும் ஓரிடத்தில் உறைய வைக்கும் ஆலயம். கடவுளுக்குரிய மக்களாய் வாழும் குட்டித் திருஅவை. அதே சமயத்தில் சவால்கள் நிறைந்தது, பிரச்சனை மிக்கது, பல்வேறு துன்பமும், மகிழ்ச்சியும் கலந்தது. சுமைகளும், சுகங்களும் நிரம்பியது. சவால்களையும், சோதனைகளையும் கடந்து சாதனை படைத்தது திருக்குடும்பம்.

திருக்குடும்பத்தில் நடந்த சவால்கள் பலப்பல. குழந்தையை பெற்றெடுக்க இடமில்லாமல் தவித்த குடும்பம். பாதுகாப்புக்காக வேறு நாட்டுக்கு ஓடிய குடும்பம். தச்சுத் தொழில் செய்து தேவைகளை நிறைவு செய்த குடும்பம். இவ்வாறு பல துன்பங்களுக்கு மத்தியிலும் திருக்குடும்பம் உறுதியோடும், மகிழ்வோடும் இருந்ததற்குக் காரணம் இறைவனின் பிரசன்னம் அவர்களோடு இருந்ததேயாகும். இறைவனில் இணைந்து வாழ்ந்தால் கணவன், மனைவி இருவருக்குமிடையே இருக்கும் பாசப்பிணைப்பு எல்லாத் துன்பங்களையும் எதிர்கொள்ள சக்தியைத் தருகிறது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே உள்ள பாச உணர்வானது பல சாதனைகளைப் படைத்த பிள்ளைகளுக்கு சக்தியை உற்பத்தி செய்கிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு திருக்குடும்பமே. நமது குடும்பங்களும் இறைவனில் இணைந்து இறைத்திருவுளத்தை தேடுவோம் நமது குடும்பங்களும் திருக்குடும்பங்களாக மாறட்டும்.

**முதல் வாசக முன்னுரை**

சீராக்கின் ஞான ஆசிரியர் நல்ல குடும்ப வாழ்வு அமைய நல்ல பெற்றோர், நல்ல பிள்ளைகள், நல்ல சூழல் தேவை என்பதை வற்புறுத்தி பெற்றோருக்கு பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்தியம்புகிறார். தாய் தந்தையைப் போற்றி மதிக்கக் கூடியவர்கள் எல்லா ஆசீரையும் பெற்று வாழ்வர் என்று உரைக்கிறது இன்றைய முதல் வாசகம். பாலன் இயேசுவைப் போல நாமும் நமது பெற்றோர்களுக்கு கீழ்படிந்து இறை ஞானத்திலும், இறை அருளிலும் வளர அருள் வேண்டுவோம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



## திருவருகைக்காலம் 3-ம் ஞாயிறு (17.12.2023)

எசா 61:1-2,10-11 1தெச 5:18-24 யோவா 1:6-8,19-28

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சி எங்கு கிடைக்கும் என்று தேடி அலைந்து கொண்டு இருக்கிறான். இந்த மகிழ்ச்சி பணத்தில் அல்லது செல்வத்தில் அல்லது சொத்தில் புகழில் கிடைக்கும் என்று எண்ணி அவற்றின் பின்னே ஓடி அலைந்து கொண்டிருக்கிறோம். ஆனால் துர்திஷ்டவசமாக நம்முடைய முயற்சிகளெல்லாம் கானல் நீராகவே அமைந்துவிடுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் இன்றைய வாசகங்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான அழைப்பை நம்முன் வைப்பது மட்டுமல்லாமல் மகிழ்ச்சியைப் பெறுவதற்கான வழியையும் சுட்டிக்காட்டுகின்றன. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள் என்று புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார். ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன். என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும் என்று எசாயா அக்களிக்கின்றார். இத்தகைய மகிழ்ச்சியையும் பூரிப்பையும் பெற ஆண்டவரோடு இணைந்து வாழவும் நம்மையே நாம் ஏற்றுக் கொண்டு இருப்பதில் மனநிறைவு கொள்ளவும் இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இத்திருவருகைக் காலத்தில் செபத்திலும், தூய ஆவியின் செயல்பாட்டிலும் நம்மையே நாம் ஈடுபடுத்திக் கொண்டு நிறைவான மகிழ்வோடு வாழ அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

ஆண்டவர் தம் அருள் தரும் ஆண்டை இஸ்ரயேல் மக்கள் ஜூபிலி ஆண்டாக கருதினர். வறுமை அகற்றப்பட்டு, கொடுமை நீக்கப்பட்டு, அநீதி ஒழிக்கப்பட்டு இஸ்ரயேலர் அனைவரும் விடுதலை வாழ்வு வாழ வேண்டிய ஆண்டு. நாமும் இத்திருவருகை காலத்தில் தூய ஆவியின் துணையோடு எல்லா தீமைகளிலிருந்தும், விடுதலை பெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்திட அருள் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நமது வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய பொருள்மிக்க அறிவுரைகளை புனித பவுல் தருகிறார். எப்போதும் மகிழ்ச்சியோடு

வாழ்ந்திட இடைவிடாமல் செபிக்கவும், தூய ஆவியின் செயல்பாடுகளை வாழ்வாக்கிடவும் வேண்டும் என்கிறார் புனித பவுல் அடிகளார். இயேசுவின் வருகைக்கு நம்மையே தயார் செய்யச் செபம் ஓர் இன்றியமையாத சாதனம் என்பதை உணர்ந்து நம் செப வாழ்வை உறுதிப்படுத்துவோம். தூய ஆவியாரின் உந்துதலுக்கு செவிமடுத்து அவரின் ஏவுதல்களுக்கு ஏற்ற முறையில் நம் வாழ்வை அமைப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஒவ்வொரு திருவருகைக் காலமும் மீட்பின் காலத்தின் துவக்கம் என்பதை உணர்ந்து தீமைகளை விடுத்து நீதியோடும், உண்மையோடும், நேர்மையோடும் உம்மை நோக்கி பயணிக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் உலக வழிகளிலும், உலக செல்வங்களிலும் மகிழ்ச்சியை தேடாமல் செபத்திலும், இறைவனது உறவிலும், உண்மையான மகிழ்ச்சியைத் தேடி அதைப் பெற்றிட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா இத்திருவருகைக் காலத்தில் புனித திருமுழுக்கு யோவானைப் போல நாங்களும் உமது மீட்பைக் கண்டு உணர்ந்து அம்மீட்புக்குச் சாட்சியாக வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா உமது வருகை அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு தருகின்ற ஓர் மீட்பின் காலமாக எங்களுக்கும் எம்மை சுற்றி வாழ்பவர்களுக்கும் அமைந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவருகைக் காலம் 4-ம் ஞாயிறு(24.12.2023)

2 சாமு 7:1-5,8-12,14-16 உரோ 16:25-27 லூக் 1:26-38

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்த இறைமக்களே ஒவ்வொரு திருவருகைக் காலமும், சீனாய் மலையில் இறைவன் தம் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் நினைவாகக் கட்டப்பட்ட உடன்படிக்கை பேழை மற்றும் அது வைக்கப்பட்டிருந்த கூடாரத்தை நினைவூட்டுகின்ற ஒரு நிகழ்வாக அமைகின்றது. உடன்படிக்கைப் பேழையும், அதன் கூடாரமும் இறைவனது பிரசன்னத்தை வெளிப்படுத்தி சென்ற இடமெல்லாம் இஸ்ரயேல் மக்களுக்கு வாழ்வையும் வெற்றியையும் பெற்றுத்தந்தது. அந்த வல்லமை மிக்க பிரசன்னம் நமது அனுதின வாழ்வில் பெற்றிட காலம் நிறைவுற்றபோது வார்த்தை மரியாவின் வழியாக இவ்வுலகில் மனுவுருவானார் என்கின்றது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. மரியா இறைப்பிரசன்னத்தை சுமந்து செல்லும் புதிய உடன்படிக்கை பேழையாகவும், கூடாரமாகவும் மாறுகிறார். மரியாவின் இத்தகைய ஆன்மீக வாழ்வுத் துவக்கம் அவர் இறைவனுக்கு





தன்னை முழுவதும் அர்ப்பணித்து அடிமையாக்கிக் கொண்டதே என்பதை உணர்ந்து நமது ஆன்மீக வாழ்வின் அடித்தளத்தை தாழ்ச்சியெனும் கற்கள் கொண்டு கட்ட முயல்வோம். அதற்கான இறையருளை வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இஸ்ரயேலரின் பாதுகாப்பாளரும் மீட்பருமான இறைவன் தங்கிய இடம் கூடாரம். எகிப்திலிருந்து இஸ்ரயேலரை மீட்ட நாள் முதல் பயணம் முழுவதும் மக்களோடு தங்கி வாழ்ந்த இடம் கூடாரம். மக்களோடு இறைவன் கொண்ட நெருங்கிய உறவைச் சுட்டிக்காட்டுவது கூடாரம். எனவே தான் இயேசுவின் பிறப்பை வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார் என்பார். பாலன் இயேசுவை பின்பற்ற விரும்பும் நாமும் சாதாரண மக்களைப் போன்று எளிய வாழ்வு கூடார வாழ்வு வாழ வரம் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இறைவன் நமக்கு தருகின்ற மீட்பைக் குறித்து இன்றைய இரண்டாம் வாசகம் நமக்கு உரைக்கின்றது. நம் வாழ்விலே மனக்கலக்கம், தெளிவின்மை, நிலையற்ற போக்கு முதலியன நம்மை ஆட்டுவிப்பதை அனைவரும் உணர்கிறோம். உள்ளத்திலே ஊக்கமும் உறுதியும் நாம் நல்வாழ்வு வாழ அடிப்படைத் தேவைகள். இறைவன் ஒருவரே, நாம் மனம் கலங்காது நம் விசுவாசத்தில் உறுதியாயிருக்க உதவுபவர். பாலன் இயேசுவிடம் நம்முடைய விசுவாச வாழ்வில் பிடிப்பும் உறுதியும் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இத்திருவருகைக் காலத்தில் இறைவனது வல்லமைமிக்க பிரசன்னத்தை உணர்ந்து இறைவன் குடிகொள்ளும் இல்லங்களாக நாங்கள் வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா நாங்கள் ஒவ்வொருவரும் உமது தெய்வீக பிரசன்னம் எங்களோடு இருக்கின்றது என்பதை உணர்ந்து எல்லா கவலைகளிலிருந்தும், மனக்கலக்கத்திலிருந்தும் விடுதலை பெற்று ஊக்கமும் உறுதியும் கொண்ட நல்வாழ்வை வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, வருகின்ற கிறிஸ்து பிறப்பு நாளிலே நாங்கள் ஒவ்வொருவரும் எங்களிடையே இருக்கின்ற வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் மரியாவைப் போல உமது வார்த்தைக்கு ஆம் என்று சொல்லி அவ்வார்த்தையை வாழ்வாக்கி எங்களது ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சி அடைய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.